1993 அக்டோபர் 29]

12. அரசினர்சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி.

(எ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு. எண் 38/1993) மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1993) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விற்பனை வரிச் சட்டத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். இந்த விற்பனை வரி என்பது தொடர்ந்து உயர்த்தப்படுகிறது. அப்படி விற்பனை வரி தமிழகம் முழுவதும் உயர்த்தப்படுவதும், தமிழகத்தில் உள்ள விற்பனையாளர்கள் அந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று அரசுக்குத் தொடர்ந்து முறையீடு செய்து கொள்வதும் நடக்கின்றன. மேலும் மேலும் விற்பனை வரி உயர்த்தப்படுவதால், அந்த வரி உயர்வு, பொருள்களை வாங்கிப் பயனபடுத்துகின்ற மக்களுக்குப் பெரும் சுமையாக மாறுகிறது. அப்படிச் சுமையாக மாறக்கூடிய விற்பனை வரி உயர்வை அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஒவ்வொரு நாளும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் முழுவதிலும் விற்பனையாளர்கள் இந்த விற்பனை வரியை உயர்த்தி அதன் மீது சுமத்தி மக்களைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே இந்த விற்பனை வரி உயர்வைக் கைவிட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர்.

@29—10—1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1993) என்பது, ஏற்கெனவே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுங்க வரிகள் மத்திய அரசு விதிக்க வேண்டிய பொருட்கள் எவையெவை என்றும் அவைகள் அந்த ஷெட்யூலில் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கிற சில பொருள்களின் பெயர்கள் விளக்கமாக இல்லை என்ற காரணத்தால்தான் அந்தப் பெயர்களை விளக்கி அந்தப் பொருள்களை அந்த ஷெட்யூலில் சேர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வரி ஏதும் இப்போது கூட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். அதன்படி 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1993) நிறைவேற்றப் பெறவேண்டும்'', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1993 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள்